தஞ்சை பெருவுடையார் கோவில்களில் உள்ள சிற்பங்கள் மூலம்,

- இராசஇராசசோழன்,

- குலோத்துங்க சோழன்,
- இராசேந்திர சோழன்,

இரண்டாம் இராசராசன் போன்ற மன்னர்களின் வரலாறுகளையும், அவர்கள் கலை வளர்த்தப் பாங்கினையும் அறியலாம்.

- கிருஷ்ணாபுரம் வேங்கடாசலபதி கோவிலில் உள்ள குறவன்,
- குறத்தி,
- இரதிதேவி சிலைகள் காண்போரை ஈர்க்கும் கலைநயம் வாய்ந்தவை.

சிற்பங்களின் கலை நயம்:

"கற்கவிஞர்கள்" என்று சிறப்பிக்கப்படும் சிற்பிகள் வடித்த சிற்பங்கள் ஒவ்வொன்றும் கலைநயம் மிக்கவையாய் மிளிர்கின்றன.

சிற்பங்களை கோவில்களின் கட்டடங்கள், கற்றூண்கள், சுற்றுச்சுவர்கள் நுழைவு வாயில்கள் என அனைத்து இடங்களிலும் கலைநயம் மிளிர செதுக்கினர்.

புதுக்கோட்டைமாவட்டம்:

- புதுக்கோட்டைமாவட்டம் நார்த்தாமலையில் உள்ள சிற்பம்நடனக்கலையின் முத்திரைகளுடன் அமைக்கப்பட்டிருக்கும் பாங்கு கலை நயத்துக்கோர் சான்றாகும்.

www.Padasalai.Net

- கடவுளின் உருவங்களும், மனித உருவங்களும் மிகுந்த கலை நுட்பத்தோடு வடிவமைக்கப்பட்டுள்ளன.
- திருவரங்கக் கோவிலினுள் அமைக்கப்பட்டுள்ள சிற்பங்களில் வெளிப்படும் முக பாவனைகள் சிற்பக்கலை நுட்பத்திற்கு தனி சான்றாய்த் திகழ்கிறது.
- கோவில் கோபுரங்களில் சுதைகளாலான சிற்பங்கள் மிகுதியாக உள்ளன.
- அவற்றுள் ஆடை, அணிகலன்கள் அணிந்த நிலையில் உள்ள உருவங்கள் சிற்பங்களாயின.
- அவையும் சிற்பக் கலைநுட்பம் வாய்ந்தவை. உருவங்கள் விழியோட்டம், புருவ நெளிவு.
- நக அமைப்பு என மிக மிக நுட்பமாக கலை நயத்துடன் படைக்கப்பட்டுள்ளன.

www.Padasalai.Net

விஜயநகர மன்னர்கள் :

- விஜயநகர மன்னர்கள் கோவில்களில் மிக உயர்ந்த கோபுரங்கள் அமைக்கும் பணியைச் செவ்வனே செய்தது, அவற்றில் சுதைகளாலான சிற்பங்களை அமைக்கச் செய்தனர்.
- சோழர் காலத்தை செப்புத் திருமேனிகளின் பொற்காலம் என்று சிறப்பிக்கின்றனர்.

- நாயக்க மன்னர்களின் காலத்தில் ஆயிரங்கால் மண்டபம் அமைக்கப்பட்ட வரலாற்றை அறிவிக்கிறது இக்கலை.
- மதுரை மீனாட்சியம்மன் கோயில் தூண்களில் உள்ள சிற்பங்கள்
- கண்ணப்பர்,
- சந்திரமதி, அரிச்சந்திரன் வரலாற்றை எடுத்துக் கூறுகிறது.

முடிவுரை:

சிற்பங்கள் என்பன தெய்வங்களாகப் போற்றி வணங்குவதற்கும், ஏனைய உருவங்களைக் கண்டு களிப்பதற்கும் மட்டுமல்ல, அவை கலைநயத்தின் சான்றாகவும், வரலாற்றுப் பதிவுகளாகவும், அறிவின் முதிர்ச்சிக்கு ஓர் அடையாளமாகவும் இருப்பதால் சிற்பக்கலையைப் போற்றி பேணுவது நம் கடமையாகும்.

www.Padasalai.Net

---

3)இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லை என்பதைச் "செய்தி" கதையின் மூலமாக விளக்குக.

முன்னுரை:-

- செய்தி என்னும் சிறுகதையின் ஆசிரியனர் தி.ஜானகிராமன்.

- இக்கதை "சிவப்பு ரிக்சா என்ற சிறுகதை தொகுப்பில் இடம் பெற்றுள்ளது.
- இசைக்கு நாடு, மொழி, இனம் தேவையில்லாமல் என்பதை இக்கதையில் காண்போம்.

வித்துவான்:-

- இசைக்கு மயங்காத உயிர்கள் இல்லை.
- அத்தகைய இசைக்கு காரணம் இசைக் கருவிகள் தமிழக இசையில் தன் முத்திரை பதித்தது நாதஸ்வரம்.
- இதில் பல இராகங்களை கொண்டு வித்துவான் வாசித்தார்.
- அத நிகழ்ச்சியில் பிலிப் போல்ஸ்கா என்ற வித்துவானும் வந்திருந்தார்.

www.Padasalai.Net

இசைமயக்கம்:-

- நாதஸ்வரக் கலைஞர் வாசிக்கத் தொடங்கினார். நாதஸ்வர இசை இனிக்க ஆரம்பித்தது.
- போஸ்கோ சிரித்தபடியே தன்னையே இழந்து இரசிக்கின்றார்.
- இசை வெள்ளத்தில் மிதக்கின்றார்.
- வெளிநாட்டவர் தமிழக இசைக்கு மெய் மறக்கின்றனர்.

- வித்துவானின் சாமாராகம் அனைவரையும் மயங்கச் செய்தது.
- ஆடவும் செய்தது.

<u>செய்தி:-</u>

- வித்வானிடம் சாந்தமுலேகாவை 5, 6 முறை வாசிக்கக் கேட்டு மகிழ்ந்தார்.
- இதில் ஒரு செய்தி இருப்பதாகவும். ஏதோ ஒரு உலகத்தில் இருந்து வந்த செய்தி கேட்கிறது.
- நான் அதில் மூழ்கி விட்டேன் என்றார் போஸ்கா.
- எனக்கு அனுப்பிய செய்தி, உலகத்திற்கே அனுப்பிய செய்தி, அது தமிழ் இசையின் செய்தி.
- வேறு எந்த சங்கீதமும் இதனை கொடுக்கவும் இல்லை. அதனை நான் வாங்கிக் கொண்டேன்.

www.Padasalai.Net

<u>முடிவுரை:–</u>

போஸ்கோவின் செயல்பாடுகள் இசைக்கு நாடு, மொழி, மதம் என எதுவும் இல்லை என்பதை உணர்த்துகிறது.

Unit -7

இயல் ஏழு

குறுவினா:

1)இந்திய தேசிய இராணுவத்தில் குறிப்பிடத் தகுந்த தமிழக வீரர்கள் யாவர்?

- கேப்டன் தாசன்
- ஜானகி
- அப்துல் காதர்
- இராஜாமணி
- சிதம்பரம்
- கேப்டன் லட்சுமி
- லோகநாதன்
- இராமு

www.Padasalai.Net

---

2)தாய்நாட்டுக்காக உழைக்க விரும்பினால் எப்பணியைத் தேர்ந்தெடுப்பீர்கள்? ஏன்?

➔ நான் இராணுவப் பணியை தாய்நாட்டுக்காக உழைக்க தேர்ந்தெடுப்பேன்.

➔ ஏனெனில், தாய்நாட்டைப் பாதுகாக்கவும், இந்திய ஒருமைப்பாட்டையும் இறையாண்மையைப் பேணவும் கிடைத்த வாய்ப்பாக இராணுவப் பணியைக் கருதுகிறேன்.

---

3)மதுரைக் காஞ்சி – பெயர்க்காரணத்தைக் குறிப்பிடுக.

➔ காஞ்சி என்றால் நிலையாமை என்று பொருள். "மதுரை" நகரைக் குறிக்கும்.
➔ மதுரை நகரின் சிறப்புகளைப் பாடுவதாலும், நிலையாமையைப் பற்றியக் கருத்துகளைக் கூறுவதாலும், இப்பெயர் பெற்றது.

www.Padasalai.Net

---

4)உங்கள் ஊரில் உற்பத்தியாகும் பொருள்களையும்

சந்தையில் காணும் பொருள்களையும் ஒப்பிட்டு எழுதுக.

உற்பத்தியாகும் பொருள் :

➔ மனிதர்கள் நாடோடியாக, வேட்டையாடி கிடைத்த உணவை உண்டனர்.
➔ பின்னாளில் நால்வகை நிலங்களில் உற்பத்தி பெருகியது.
➔ காய்கறி, கீரை, தானியம் ஆகியவற்றை உற்பத்தி செய்தனர்.

சந்தையில் காணும் பொருள்:
உழவர்கள் உற்பத்தி செய்த பொருள்களை விற்கவும், மாற்றுப்பொருளை வாங்கவும் முச்சந்தி, நாற்சந்தி என மக்கள் கூடும் இடங்களில் கடை விரித்துப் பொது வணிகமாக்கினர்.

---

www.Padasalai.Net

5)கருக்கொண்ட பச்சைப்பாம்பு, எதற்கு உவமையாக்கப்பட்டுள்ளது?

கருக்கொண்ட பச்சைப்பாம்பு நெற்பயிர்கள் தோற்றத்திற்கு உவமையாக்கப்பட்டுள்ளது.

---

6)அள்ளல் பழனத்து அரக்காம்பால் வாயவிழ இவ்வடியில் சேற்றையும் வயலையும் குறிக்கும் சொற்கள் யாவை?

- அள்ளல் – சேறு

- பழனம் – வயல்

---

7)டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' என்ற முழக்கம் யாரால் எப்போது செய்யப்பட்டது?

➔ நேதாஜி சுபாஷ் சந்திர போஸ் இந்திய தேசிய இராணுவத்தின் பொறுப்பை ஏற்க, ஜெர்மனியில் இருந்து சிங்கப்பூர் வந்தார்.

➔ 1943-ஆம் ஆண்டு சூலை மாதம் 9ஆம் நாள் பொறுப்பை ஏற்கும்போது டெல்லி நோக்கிச் செல்லுங்கள்' (டெல்லி சலோ) எனப் போர் முழக்கம் செய்தார்.

www.Padasalai.Net

சிறுவினா

1)குறிப்பு வரைக: டோக்கியோ கேடட்ஸ்.

➔ இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரிலியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

➔ அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர் தான் டோக்கியோ கேடட்ஸ...

---

2)<u>பனியிலும், மலையிலும் எல்லையைக் காக்கும் இந்திய வீரர்களின் பணியைப் பாராட்டி உங்கள் பள்ளிக் கையெழுத்து இதழுக்கு ஒரு துணுக்குச் செய்தி எழுதுக.</u>

<u>இந்திய இராணுவ வீரர்களின் தியாகம்</u>

➔ நாட்டையும் தன் நாட்டு மக்களையும் காக்க தன் குடும்பம் மறந்து பணி செய்வோர் இராணுவ வீரர்கள்.

www.Padasalai.Net

➔ கடும் வெயில்,

➔ கடுங்குளிர்,

➔ புயல் மழை,

➔ சூறாவளி,

➔ சுனாமி,

➔ பூகம்பம் என எது வந்தாலும் தாய்நாட்டு மக்களைக் காக்கும் தகைசால் மாமனிதர்கள் இராணுவ வீரர்கள்.

➔ குண்டு மழை பொழியும் போர்களத்தில் நெஞ்சம் நிமிர்த்திப் பேராடும் பண்பாளர்கள் அவர்.

➔ தன் நாட்டுக்காகத் தன்னுயிரைக் கொடுக்கும் தியாக வள்ளல்கள்.

➔ மெழுகுவர்த்தி போல தன்னைத் தன் நாட்டிற்காக உருக்கிக் கொள்பவர்கள்.

➔ அவர்கள் பணிக்கு எங்கள் நெஞ்சார்ந்த வணக்கங்கள்.

---

3)"மாகால் எடுத்த முந்நீர் போல" – இடஞ்சுட்டி பொருள் விளக்குக.

இடம் :

மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக் காஞ்சி என்னும் நூலில் இடம் பெற்றுள்ளது.

www.Padasalai.Net

பொருள் :

மதுரையின் வளங்களையும், விழாக்களையும் பற்றிக் குறிப்பிடும் போது புலவர் இவ்வாறு குறிப்பிடுகிறார்.

விளக்கம் :

மதுரை நகரில் பல்வேறு ஒலிகள் எழுகின்றன. விழாவைப் பற்றி முரசறிவோர் முரசறைகின்றனர்.

அந்த முழக்கம் பெருங்காற்றுப் புகுந்த கடல் ஒலிபோல் இருக்கிறது என்பது இத்ததொடரின் கருத்து (மாகால் – பெருங்காற்று, முந்நீர் – கடல்).

---

4)தற்குறிப்பேற்ற அணியை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

இலக்கணம்:-

இயல்பாக நிகழும் நிகழ்ச்சியின் மீது கவிஞர் தன் மனக்கருத்தை ஏற்றிக் கூறவது தற்குறிப்பேற்ற அணி ஆகும்.

www.Padasalai.Net

சான்று:-

அள்ளல் பழனத்து அரக்காம்பல் வாயவிழ

வெள்ளம்தீப் பட்ட(து) எனவெரீஇ இப்பு ள்ளினம்தம்

விளக்கம்:-

இயல்பான நிகழ்வு – வயலில் ஆம்பல் மலர்தல்.

கவிஞர் மனக்கருத்து – நீர் பறவைகள் வெள்ளத்தில் தீப்பற்றியதாக எண்ணி வருந்தி தன் குஞ்சுகளை காத்தல்.

ஆகையால் இச்செய்யுள் தற்குறிப்பேற்ற அணி ஆயிற்று.

---

5)சேர, சோழ, பாண்டிய நாட்டு வளங்களை முத்தொள்ளாயிரம் வழி விளக்குக.

சேர:-

- ➔ வயல்களில் செவ்வாம்பல் மெல்ல விரிந்தன.
- ➔ அதனைக் கண்ட நீர்ப்பறைவகள் தண்ணீர் தீப்பிடித்து விட்டது என்று நினைத்து தம் குட்டிகளை சிறகில் மறைத்து வைத்தன.
- ➔ பகைவர் அஞ்சும் சேர நாட்டில் இந்த அச்சமும் இருக்கின்றது.

www.Padasalai.Net

சோழர்:-

- ➔ உழவர்கள் நெய்போர் மீது ஏறி "நாவலோ" என்று கூறி மற்ற உழவர்களை அழைப்பர்.
- ➔ இது போரில் யானை மீது நின்று "நாவலோ" என்று கூவி மற்ற வீரர்களை அழைப்பது போல் இருந்தது.
- ➔ இத்தகு வளம் சோழ நாட்டில் காணப்பட்டது.

பாண்டியர்:-

➔ கொற்கை நகரில் முத்துகளைப் போல் சங்குவின் முட்டைகள், புன்னை மொட்டுகள், பாக்கு பாளையில் இருந்து சிந்தும் மணிகள் ஆகியவை.

➔ இத்தகைய வளம் பாண்டியர் நாட்டில் காணப்பட்டது.

---

6)ஏமாங்க நாட்டில் எவையெல்லாம் ஆயிரக்கணக்கில் இருப்பதாக திருத்தக்க தேவர் பாடியுள்ளார்?

➔ ஆயிரம் வகையான உணவுகள்

➔ உணவளிக்கும் அறச்சாலைகள் ஆயிரம்

➔ மகளிர் ஒப்பனை செய்ய மணிமணிமாடம் ஆயிரம்

➔ கம்மியர் ஆயிரம் பேர்

➔ திருமணங்கள் ஆயிரம்

இப்படி ஆயிரம் நிகழ்வுகள் ஏமாங்க நாட்டில் குறைவின்றி நடக்கின்றன.

www.Padasalai.Net

---

7)பண்பாகு பெயர், தொழிலாகுபெயர் – விளக்குக.

பண்பாகு பெயர்:

‘மஞ்சள் பூசினாள்’

‘மஞ்சள்’ என்னும் பண்பு, அவ்வண்ணத்தில் உள்ள கிழங்குக்கு ஆகி வந்துள்ளது.

தொழிலாகு பெயர்:

‘வற்றல் தின்றான்’

‘வற்றல்’ என்னும் தொழிற்பெயர் வற்றிய உணவுப் பொருளுக்கு ஆகிவந்துள்ளது.

நெடுவினா

1)இந்திய தேசிய இராணுவததின் தூண்களாக திகழ்ந்தவர்கள் தமிழர்கள் என்பதை கட்டுரை வழி நிறுவுக.

www.Padasalai.Net

முன்னுரை:-

இந்திய விடுதலைப்போரில் இந்திய தேசிய இராணுவத்தின் தூண்களாகத் திகழ்தவர்கள் தமிழர்கள். அவர்களைப் பற்றி இங்கு காண்போம்.

பசும்பொன் முத்துராமலிங்கனார்:-

➔ 1943 இல் அன்றைய ஆங்கில அரசை இந்திய தேசிய இராணுவப்படை எதிர்த்தபோது,

பசும்பொன் முத்துராமலிங்கனார் விடுதலை உணர்வு கொண்ட வலிமை மிக்க தமிழர்ப் பட்டாளங்களை ஒன்றிணைத்து, இந்திய இராணுவத்திற்கு வலு சேர்த்தார்.

➔ அதனால், இந்திய தேசிய இராணுவத்தின் இதயமும், ஆத்மாவும் தமிழர்கள் என்றால் தில்லான்.

இரண்டாம் உலகப்போர்:-

➔ தமிழர் துணையுடன் போராடிய நேதாஜியை, ஆங்கிலப் பிரதமர் சர்ச்சில் கோபம் அடைந்து, "மலேயாவில் உள்ள தமிழர்களின் இரத்தம் நேதாஜியின் மூளையில் கட்டியாக உள்ளது" என்றார்.

➔ அதற்கு நேதாஜி " தமிழினம் தான் ஆங்கிலேயரை அழிக்கும்" என்றார்.

www.Padasalai.Net

மகளிர்ப்படை:-

➔ ஜான்சி ராணி பெயரில் பெண்கள் படை உருவாக்கப்பட்டது. இதன் தலைவர் டாக்டர் லட்சுமி.

➔ இதில் தமிழகப் பெண்கள் பலர் பங்கேற்றனர். தலைசிறந்தவர்களாக ஜானகி, இராஜாமணி ஆகியோர் விளங்கினார்.

➔ நேதாஜி அமைத்த தற்காலிக அரசில் கேப்டன் லட்சுமி, சிதம்பர லோகநாதன் முதலான தமிழர்கள் அமைச்சர்களாக விளங்கினர்.

<u>வான் படை:-</u>

➔ இந்திய தேசிய இராணுவத்தில் இருந்து 45வீரர்கள் நேதாஜியால் தேர்வு செய்யப்பட்டு, வான்படைத் தாக்குதலுக்கான சிறப்புப் பயிற்சி பெறுவதற்காக, ஜப்பானில் உள்ள இம்பீரிலியல் மிலிட்டரி அகடமிக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

➔ அந்த 45 பேர் கொண்ட பயிற்சிப் பிரிவின் பெயர் தான் டோக்கியோ கேடட்ஸ்.

➔ இதில் பெரும்பாலானோர் தமிழர்கள்.

➔ அதில் சிறந்து விளங்கியவர் கேப்டன் தாசன்.

➔ இவர் இந்தியாவில் செசல்ஸ் நாட்டுத் தூதுவராகப் பணியாற்றியவர்.

<u>முடிவுரை-</u>

நாட்டிற்காக உயிர் கொடுத்த முகம் தெரியாத தமிழர்களின் உணர்வைப் போற்றி வழிபடுவோம் அவர்தம் உன்னத செயல்களை உலகறிய செய்வோம்.

www.Padasalai.Net

2)ஏமாங்க நாட்டு வருணணைகளை நும் ஊர் குறித்த வளங்களோடு ஒப்பிடுக

ஏமாங்க வருணணை	எங்கள் ஊர் வளம்
தென்னை மரத்திலிருந்து விழுகின்ற தேங்காய் தேனடையைக் கிழித்து பலாப் பழத்தைப் பிளந்து, மாங்கனியை சிதற வைத்து, வாழைப்பழத்தை உதிரச்செய்தது	தேங்காய்கள் வயல் ஓடைகளில் விழுந்து பூக்களை தழுவிச் செல்கிறது.
வள்ளல்களைப் போன்றது வெள்ளம். அது மலையில் இருந்து செல்வத்தை அடித்து வந்து ஊர் மக்களுக்கு வழங்கும் வகையில்	பூக்களையும், பழங்களையும் வெள்ளம் அடித்து வந்து ஊரினில் சேர்க்கும்.

www.Padasalai.Net

பாய்கின்றது.	
எருமைகளும், எருதுகளும் பேரொலி எழுப்புகின்றன. அது கேட்டு வாரல் மீன்கள் ஓடுகின்றன.	ஏர் மாடுகளின் சத்தம் வயல்களில் எங்கும் கேட்கும்.

3)எங்கள் ஊர்ச் சந்தை – என்னும் தலைப்பில் நாளிதழ் செய்தி ஒன்றை எழுதுக

www.Padasalai.Net

➔ எங்கள் ஊர் தென்காசி மாவட்டம், ஆலங்குளம் தாலுகாவில் உள்ள வெங்கடேஸ்வரபுரம்.

➔ இங்கு புகழ்பெற்ற வாரசந்தை அமைந்துள்ளது.

➔ இந்த சந்தையானது வாரம் ஒரு முறை அதாவது சனிக்கிழமை அன்று மட்டும் கூடும்.

➔ இங்கு அனைத்து வித பொருள்களும் கிடைக்கும். எங்கள் ஊரை சுற்றியுள்ள கிராமங்களில் உற்பத்தியாகும் அனைத்து பொருட்களும் எங்கள் சந்தையில் தான் விற்பனை செய்யப்படுகிறது.

➔ இங்கு எல்லாவிதமான

➔ காய்கறிகள்,
➔ பழங்கள்,
➔ மளிகை பொருட்கள்,
➔ எண்ணெய் வகைகள்,
➔ இறைச்சி,
➔ மீன்,
➔ கருவாடு முதலிய பொருட்களும் கிடைக்கும்.
➔ மேலும் ஆடுகள், கோழிகள் அதிகமாக விற்பனை செய்யப்படுகின்றன.
➔ எனவே மக்கள் அனைவரும் வருகை தந்து தங்களுக்கு வேண்டியவற்றை வாங்கி சென்று பயனடையுமாறு கேட்டுக்கொள்கிறோம்

www.Padasalai.Net

Unit -8

இயல் எட்டு

குறுவினா:

1)"பகுத்தறிவு" என்றால் என்ன?

எச்செயலையும் அறிவியல் கண்ணோட்டத்துடன் அணுகி ஏன்? எதற்கு? எப்படி? என்ற வினாக்களை

எழுப்பி, அறிவின் வழியே சிந்தித்து முடிவெடுப்பதே பகுத்தறிவு ஆகும்.

---

2)தாவோ தே ஜிங் 'இன்னொரு பக்கம்' என்று எதைக் குறிப்பிடுகின்றார்?

தாவோ நே ஜிங் "இன்னொரு பக்கம்" என்று இருத்தலின்மையைப் பயன்படுத்திக் கொள்வதை (வெற்றிடமே பயன்படுகிறது) குறிப்பிடுகிறார்.

---

3)கழுகு மரம் எதைத் தேடியது?

www.Padasalai.Net

பெருமரங்களுக்கு இடையே தோன்றிய கழுகு மரமானது, தான் வளர்ந்து வளம் பெறுவதற்கு, விண்ணிலிருந்து வரும் கதிரவன் ஒளியாகிய உயிர்ப்பைத் (ஒளியமுதை) தேடியது.

---

4)யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன் யார்?

யசோதர காவியத்தின் பாட்டுடைத் தலைவன், அவந்தி நாட்டு மன்னனாகிய "யசோதரன்" ஆவார்.

---

5)அசை என்றால் என்ன? அசை எத்தனை வகைப்படும்?

அசை இரு வகைப்படும். அவை நேரசை, நிரையசை ஆகும்.

சிறுவினா

1)சிக்கனம் குறித்த பெரியாரின் கருத்துக்களை இன்றைய நடைமுறையோடு தொடர்புபடுத்தி எழுதுக.

www.Padasalai.Net

- ➔ பெரியார் அவர்கள், பொருளாதார தன்னிறைவு அடையாத நிலையில் அனைவரும் சிக்கனத்தைக் கடைப்பிடிப்பது கட்டாயம் என்றார்.
- ➔ ஆனால் இன்றைய நடைமுறையில் பொருளாதாரத்தில் நிறைவு பெறவில்லை என்றாலும் சிறுகடன் பெற்றாவது அநேகர் ஆடம்பரமாகவே வாழ விரும்புகின்றனர்.
- ➔ விழாக்களும் சடங்குகளும் மூடப்பழக்கம் வளர்ப்பதோடு வீண் செலவும் ஏற்படுத்துகிறது.
- ➔ சடங்குகள், விழாக்களைத் தவிர்த்து சிக்கனமாய் வாழச் சொன்னார்.

➔ ஆனால் இன்று இதுவும் நடைமுறைப்படுத்துவது சாத்தியம் இல்லாமல் போய்விட்டது.

➔ எனவே பெரியார் கூறிய சிக்கனக் கொள்கைகளை, இன்றைய நடைமுறை நிகழ்வுகளில் பின்பற்ற முடியாத நிலையே அநேக நேரங்களில் உள்ளது.

---

2)நாம் கடைப்பிடிக்க வேண்டிய வாழ்க்கை நெறிகளாக யசோதர காவியம் குறிப்பிடுவன யாவை?

www.Padasalai.Net

➔ நாம் செய்கின்ற செயல்கள் பிறருக்குப் பயன்தரத்தக்கச் செயலாக இருத்தல் வேண்டும்.

➔ "ஆக்குவது ஏதெனில் அறத்தை ஆக்குக". நம்மிடம் உள்ள தீய நெறிகளை, பண்புகளை நீக்க விரும்பினால் முதலில் சினத்தை நீக்க வேண்டும்.

➔ "போக்குவது ஏதெனில் வெகுளி போக்குக". மெய்யறிவு நூல்களை ஆராய்ந்து ஞானம் பெற வேண்டும்.

➔ "நோக்குவது ஏதெனில் ஞானம் நோக்குக". நாம் மேற்கொண்ட நற்செயல்களாகிய விரதத்தைக் காக்க வேண்டும். .

➔ “காக்குவது ஏதெனில் விரதம்”
என்று நாம் வாழ்வில் கடைப்பிடிக்க வேண்டிய நெறிகளை யசோதர காவியம் கூறுகிறது.

---

3)பிறமொழி இலக்கியங்களைத் தழுவி எழுதப்பட்ட தமிழ் இலக்கியங்களை குறிப்பிடுக.

➔ வான்மீகி வடமொழியில் எழுதிய இராமகாதையைத் தழுவி கம்பர் “கம்பராமாயணம்” எழுதினார்.
➔ வியாசர் வடமொழியில் எழுதிய மகாபாரதத்தைத் தழுவி, ‘வில்லிபாரதம்’, ‘பாஞ்சாலி சபதம் எழுதப்பட்டது.
➔ ஷத்ரிய சூடாமணி, ஸ்ரீபுராணம், சத்ய சிந்தாமணி ஆகிய வடமொழி நூல்களைத் தழுவி “சீவகசிந்தாமணி” எழுதப்பட்டது.
➔ Pilgrim's progress நூலைத் தழுவி “இரட்சண்ய யாத்திரிகம் எழுதப்பட்டது.
➔ The secret way – என்னும் நூலைத் தழுவி” மனோன்மணியம்” எழுதப்பட்டது.
➔ புட்பந்தர் எழுதிய யசோதர சரிதம் என்னும் நூலைத் தழுவி “யசோதர காவியம்” எழுதப்பட்டது.

www.Padasalai.Net

4)யசோதர காவியம் வெளிப்படுத்தும் வாழ்க்கை நெறிகளைத் திருக்குறளுடன் ஒப்பிடுக.

அறத்தை ஆக்குக:

பின்னாளில் செய்யலாம் என்று எண்ணாது அறஞ் செய்க என்று (36வது) குறள் கூறுகிறது.

“அன்றறிவாம் எண்ணாது அறஞ்செய்து மற்றது
பொன்றுங்கால் பொன்றாத் துணை

வெகுளி போக்குக:

யாரிடத்தும் கோபம் கொள்ளாமல் சினத்தை மறந்துவிட வேண்டும் என்று (குறள் 303) கூறுகிறது.

“மறத்தல் வெகுளியை யார்மாட்டும் தீய
பிறத்தல் அதனான் வரும்”.

ஞானம் நோக்குக:

குற்றமில்லாத அறிவைக் கண்டவர்க்கு அறியாமை நீங்கி இன்பம் கிட்டும் என்று (குறள் 352) கூறுகிறது.

“இருள் நீங்கி இன்பம் பயக்கும் மருள்நீங்கி
மாசறு காட்சி யவர்க்கு”.

www.Padasalai.Net

விரதம் காக்க:

விரதம் என்றால் நன்னெறி. தீய செயல்கள் தீயைப் போல் தீமைதரும், எனவே கொடிதான தீமையை விட்டு விலகி நன்னெறி பற்றுக என்று (202) குறள் கூறுகிறது.

“தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்”.

இவையே யசோதர காவியமும் திருக்குறளும் குறிப்பிடும் வாழ்க்கை நெறிகள் ஆகும்.

நெடுவினா

www.Padasalai.Net

1)மொழியிலும் இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.

முன்னுரை:

- ➔ தமிழக மக்களைப் பகுத்தறிவு பாதைக்கு அழைத்துச் சென்றவர் பெரியார்.
- ➔ இந்தியாவின் பழமையான மொழி தமிழ். பழமையான இலக்கியமும் தமிழிலே உள்ளன.
- ➔ இலக்கியத்திலும், மொழியிலும் பெரியார் செய்த சீரமைப்புகள் பற்றி அறிந்து கொள்வோம்.

மொழி, இலக்கியம் பற்றிய பெரியாரின் கருத்து:

மொழியோ, நூலோ,

- ➔ இலக்கியமோ எதுவானாலும்,
- ➔ மனிதனுக்கு மானம்,
- ➔ பகுத்தறிவு,
- ➔ வளர்ச்சி,
- ➔ நற்பண்பு ஆகிய தன்மைகளை வளர்ப்பதாக இருக்க வேண்டும் என்ற கருத்துடையவராய் இருந்தார் தந்தை பெரியார்.

இலக்கிய சீர்திருத்தம்:

அறிவியல் வளர்ச்சிக்கேற்ற நூல்கள் படைக்கப்பட வேண்டும்.

www.Padasalai.Net

- ➔ மதம் கடவுள் ஆகியவற்றின் தொடர்பற்ற, யாவருக்கும் பொதுவான இயற்கை அறிவைத் தரும் இலக்கியமே அதிகளவில் வேண்டும்.
- ➔ திருக்குறளில் அறிவியல் கருத்துக்களும், தத்துவக் கருத்துகளும் அனைவருக்கும் பொதுவான வகையில் இடம் பெற்றிருப்பதால், அதை மதிப்புமிக்க நூலாகக் கருதியதோடு,

➔ திருக்குறளைப் போன்ற இலக்கியம் உருவாக வேண்டும் என்ற சீர்திருத்தத்தை உருவாக்க முனைந்தார்.

➔ இலக்கியமானது அரசியல்,

➔ சமூகம்,

➔ பொருளாதாரம்,

➔ சுயமரியாதை உள்ளிட்ட அனைத்துக் கருத்துகளையும் உள்ளடக்கியதாக இருக்க வேண்டும் என விரும்பினார்.

மொழியில் சீர்திருத்தம்:

➔ ஒரு மொழியின் பெருமையும், மேன்மையும், அவை எளிதில் கற்றுக் கொள்ளக் கூடியனவாக இருப்பதைப் பொறுத்தே அமைகின்றன.

www.Padasalai.Net

➔ எனவே கால வளர்ச்சிக்கு ஏற்ப தமிழ் எழுத்துக்களைச் சீரமைக்க தயங்கக் கூடாது என்று கருதினார் பெரியார்.

➔ தமிழில் “ஐ” என்பத “அய்” எனவும், “ஔ” என்பதை “அவ்” எனவும் சீரமைத்தார்.

➔ இவற்றுக்கான மாற்று வரிவடிவத்தையும் கொண்டு வந்தார்.

➔ கால வளர்ச்சிக்கு மொழி சீரமைப்புகள் தேவை என்று கருதினார்.

➔ அவரது சீரமைப்புக் கருத்தின் சில கூறுகளை 1978ம் ஆண்டு தமிழக அரசு நடைமுறைப்படுத்தியது.

முடிவுரை:

மொழி, இலக்கியம் பற்றிய பெரியாரின் சிந்தனைகள், அறிவுலகின் திறவுகோலாய்த் திகழ்ந்தது எனில் மிகையாகாது.

---

2)மொழியின் விரல் பிடித்து நடக்க பழகிக் கொண்டிருக்கும் தன் மகனுக்கு நா. முத்துக்குமார் எழுதியுள்ள கடிதச் செய்திகளைத் தொகுத்து எழுதுக.

www.PadaSalai.Net

முன்னுரை:

கடதம் எழுதுவது ஒரு கலை என்பார்கள். அத்தகு அரிய கடித்கலையில் கவிஞர் நா.முத்துக்குமார் அவர்கள் தன் மகனுக்கு எழுதிய கடிதத்தின் கருத்துகளை இனிக் காண்போம்.

வாழ்க்கை நாடகம்:

➔ உலகம் இப்படித்தான் அழ வேண்டும்.
➔ இப்படி தான் சிரிக்க வேண்டும்.

➔ சிணுங்க வேண்டும்.
➔ குப்புறக் கவிழந்து, பின் தலைநிமிர்ந்து.
➔ அந்தச் சாகத்தைக் கொண்டாட வேண்டும்.
➔ தரை எல்லாம் தனதாக்கி எழ வேண்டும்.
➔ வாழ்க்கை முழுக்க இந்த நாடகத்தை நான் நீ வெவ்வேறு வடித்தில் நடிக்க வேண்டும்.

கற்றுப்பார்:

➔ கல்வியில் தேர்ச்சி கொள்.
➔ இதேநேரம் அனுபவங்களிடம் இருந்து அதிகம் கற்றுக் கொள்.
➔ தீயைப் படித்து தெரிந்து கொள்வதை விட, தீண்டிக் காயம் பெறு.
➔ அந்த அனுபவம் எப்போதும் சுட்டுக்கொண்டே இருக்கும்.
➔ இறக்கும் வரை இங்கு வாழ, சூத்திரம் இதுதான், சுற்றுப்பார்

www.Padasalai.Net

உனக்கான காற்றை உருவாக்கு:

➔ கிராமத்தில் கூரை வீட்டில் வசித்தோம்.
➔ கோடை காலத்தில் கூரை மீது இருந்து தேள்கள் விழும்.
➔ இரவு முழுவதும் என் தந்தை விசிறியால் வீசிக் கொண்டே இருப்பார்.
➔ இன்று விசிறியும் இல்லை. கைகளும் இல்லை.

➔ மாநகரத்தில் வாழும் நீ கொடிய பல தேள் பல வடிவத்தில் இருக்கும், உனக்கான காற்றை நீயே உருவாக்கிக் கொள்.

<u>அறிவுரை:</u>

➔ கிடைத்த வேலையை விட, பிடித்த வேலையைச் செய்.
➔ இனிய இல்லறம் தொடங்கு யாராவது கேட்டால் இல்ல எனினும் கடன் வாங்கியாவது உதவி செய்.
➔ அதில் கிடைக்கும் மகிழ்ச்சி அதிகமானது. உறவுகளையும் விட மேலானது நட்பு மட்டுமே.
➔ நல்ல நண்பர்களை சேர்த்துக்கொள்.
➔ உன் வாழ்க்கை நேராகும் என்று மகனுக்கு அறிவுரை பகிர்கிறார் முத்துக்குமார்.

www.Padasalai.Net

<u>முடிவுரை:</u>

➔ உனக்கு வயதாகும் போது இதை மீண்டும் படித்துப் பார்.
➔ உன் கண்ணீர் துளியில் வாழ்ந்து கொண்டு இருப்பேன் நான் என்று கடிதத்தை நிறைவு செய்கிறார் நா.முத்துக்குமார்.

3)வாழ்க்கைப் போரில் வெற்றி பெறுவதற்கான வழிகளைக் கழுகுமரம் வாயிலாக ஆசிரியர் எவ்வாறு உணர்த்துகிறார்?

முன்னுரை:

➔ போட்டி இன்றி வாழ்க்கை இல்லை.
➔ வலிகளின்றி வெற்றி இல்லை.
➔ ஒன்றையொன்று அடுத்தும், படுத்தும் மென்மேலும் முன்னேறுவது இயற்கைக்கு மட்டுமன்று வாழ்க்கைக்கும் தான் என்ப
➔ தை ந. பிச்சமூர்த்தி அவர்கள் கழுகுமரம் வாயிலாக உணர்த்துகிறார்.

www.Padasalai.Net

கழுகு பிறந்த இடம்:

➔ அடர்ந்த இருள் போன்ற நிழல் பரப்புகின்ற பெருமரங்களின் இடையே கழுகு பிறந்தது.
➔ பெருமரங்களின் நிழல் என்னும் இருள் அதன் வளர்ச்சிக்குத் தேவையான ஒளியமுதைத் தடுத்தது.
➔ பெருமரங்களின் நிழலை வெறுத்த கழுகு தான் வளரத் தேவையான ஒளியமுதைப் பெற்று உயிர்ப்புப் பெற போராட துவங்கியது.

கழுகின் போராட்டம்:

➔ கமுகு மரம் கடுமையாகப் பெருமரங்களுடன் முட்டிமோதும் முயற்சியைத் தொடங்கியது.
➔ விண்ணிலிருந்து வரும் தன் உயிர்ப்பாகிய ஒளியமுதைத் தேடியது.
➔ மீண்டும், மீண்டும் உயர முயற்சித்தது. கதிரவனின் ஒளிக்கதிர்களாகிய விரல்களின் அழைப்பைக் கண்டது.
➔ பெருமரங்களின் இருட்டில் இருந்து கொண்டே தன் கிளையை வளைத்து ஒளியை நோக்கி நீட்டத் தொடங்கியது; வளர்ந்தது.
➔ பெரு மரங்களை முட்டி மோதும் துணிச்சலையும், முயற்சியையும் பெற்றதால் கமுகு வளைந்து,
➔ நெளிந்து,
➔ நீண்டு வளர்ந்தது மலர்ச்சி பெற்றது.

www.Padasalai.Net

வாழ்க்கைப் போர்:

➔ வாழ்க்கையிலும் இருள் போன்ற நிழல் சூழ்ந்த நிலைகள் ஏற்படலாம்.
➔ ஒளியமுதை நம்பி, வேண்டி, கமுகு துணிச்சலான முயற்சியில் ஈடுபட்டது போல, நாமும் வாழ்க்கைப் போரில் நம்பிக்கை தன்முனைப்பு, விடாமுயற்சி, உடையவர்களாய் இருந்தால் வாழ்வு மலர்ச்சி பெறும்.

முடிவுரை:

- ➔ "பெருமரத்துடன்சிறுகமுகு போட்டியிடுகின்றது, அதுவே வாழ்க்கைப் போர்.
- ➔ முண்டி போதும் துணிவே இன்பம் உயிரின் முயற்சியே வாழ்வின் மலர்ச்சி".
- ➔ இயற்கையின் போராட்டங்களையும், வாழ்வின் அனுபவங்களையும் இணைத்து அறிவுத் தெளிவுடன் வாழ்க்கைப் போரைச் சந்திப்போம்; முயல்வோம்; வெற்றி பெறுவோம்.

---

www.Padasalai.Net

Unit -9

இயல் ஒன்பது

குறுவினா

1)தமிழ்ச் சான்றோர்க்கும் உரோமையரின் சான்றோருக்கும் உள்ள வேறுபாடு யாது?

உரோம நாட்டவர் :

உரோமையரின் சான்றோர் எழுதும்போது நாம் நம்மவர் என்ற செருக்குடன் உரோமரை கருதியே எழுதுகின்றனர்.

தமிழ்ச் சான்றோர் :

எல்லா உலகிற்கும் எல்லா மாந்தர்க்கும் பயன்படும் வகையில் உலகமெல்லாம் தழுவுவதற்குரிய கொள்கையை தம் நூல்களில் யாத்துள்ளனர் என்பதே இரு சான்றோர்க்கும் உள்ள வேறுபாடு ஆகும்.

---

2)பிடிபசி களைஇய பெருங்கை வேழம் – இவ்வடியில் உள்ள இலக்கணக் குறிப்புகளை கண்டறிக.

www.Padasalai.Net

1. பிடிபசி – ஆறாம் வேற்றுமைத்தொகை
2. களை இய – சொல்லிசை அளபெடை
3. பெருங்கை – பண்புத்தொகை
4. பெருங்கை வேழம் – இரண்டாம் வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகை.

---

3)குறுந்தொகை – பெயர் காரணம் எழுதுக

குறுமை + தொகை – குறுந்தொகை நான்கு முதல் எட்டு அடிகளால் குறுகிய பாக்களால் ஆன தொகுக்கப்பட்ட நூல் ஆதலால் குறுந்தொகை எனப் பெயர் பெற்றது.

---

4)நினைத்தேன், கவித்தேன், படைத்தேன், சுவைத்தேன் இத்தொடரில் அமைந்துள் உருவகத்தைக் கண்டறிக.

கவித்தேன், சுவைத்தேன் – உருவகம்.

---

www.Padasalai.Net

சிறுவினா

1)உலக இலக்கியத்தில் காண இயலாத அரிய கருத்துகளாக ஆல்பர்ட் சுவைட்சர் குறிப்பிடுவன யாவை?

ஒழுக்கவியலை நன்கறிந்து எழுதிய உலகமேதை ஆல்பர்ட் சுவைட்சர், திருக்குறளைப் பற்றிக் கூறும் போது "இத்தகைய உயர்ந்த கொள்கைகளைக் கொண்ட செய்யுள்களை உலக இலக்கியத்தில் காண்பது அரிது என்பார்."

அவர் குறிப்பிட்ட அரிய கருத்துகள்:

- மக்கள் அனைவரும் உடன் பிறந்தவர்கள்.
- பிறப்போ சாதியோ சமயமோ மக்களை உயர்த்தவோ, தாழ்த்தவோ, முடியாது.
- இத்தகைய கொள்கைகள் வள்ளுவர் காலத்திற்கு முன்பே தமிழ் மக்களால் போற்றப்பட்டுள்ளன என்று வியக்கிறார்.

---

2)கோர்டன் ஆல்போர்ட் கூறும் மூன்று இலக்கணங்களைக் குறிப்பிடுக.

கோர்டன் ஆல்போர்ட் ஓர் உளநூல் வல்லுநர். அவர் கூறும் மூன்று இலக்கணங்களாவன.

www.Padasalai.Net

- மனிதன் தன் ஈடுபாடுகளை விரிவாக வளர்ப்பவனாக இருத்தல் வேண்டும். பிறருடைய
- நலத்திற்கும் இன்பத்திற்கும் பாடுபடக்கூடிய வகையில் தன் ஆளுமையை விரிவடையச் செய்து செழுமைப்படுத்த வேண்டும்.
- பிறரால் எவ்வாறு கணிக்கப்படுகிறோம் என்பதை அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவனாக இருக்க வேண்டும்.
- ஒருவன் அவனது வாழ்க்கைக்குச் சுய ஓர்மையைத் தரும் வாழ்க்கைத் தத்துவத்தைக் கண்டுபிடித்து நடத்தல் வேண்டும்.

---

3)"பழங்களை விடவும் நசுங்கிப் போனது" – இடஞ்சுட்டிப் பொருள் விளக்கம் தருக.

இடம்:

இக்கூற்று (இவ் அடி) கல்யாண்ஜி எழுதியுள்ள "அக்கறை" என்னும் கவிதையில் இடம் பெற்றுள்ளது.

விளக்கம்:

மிதிவண்டி ஓட்டி வந்த தக்காளி வியாபாரி மிதிவண்டியில் இருந்து சாய்ந்து விழ.

- கூடையில் இருந்த தக்காளிப் பழங்கள் சிதறி விழுந்தன.
- தலைக்கு மேல் வேலை இருப்பதாய், அனைவரும் கடந்தும், நடந்தும் சென்றனர். எல்லாம் நசுங்கி வீணானது.
- பழங்களை விடவும் சக மனிதர்கள் மீது உள்ள நேயமும், அக்கறையும் நசுங்கிப் போனது.

www.Padasalai.Net

---

4)மணல் விளையாட்டு என்னும் தலைப்பில் சிறு கவிதை படைக்க.

1. மண்ணில் பிறந்தோம்

2. மண்ணில் தவழ்ந்தோம்
3. மண்ணில் நடந்தோம்
4. அதானல் தானோ என்னவோ
5. விளையாட்டையும் கூட மண்ணில் தொடங்கினோம்.
6. மதங்களை மறந்து
7. .மனிதநேயத்தோடு.
8. இறை இல்லங்களை கட்டினோம்.
9. சாதிப்புயல் அதை சூறையாடிவிட்டத.

---

5)யா' மரத்தின் பட்டையை உரித்தது எது? எதற்காக? விளக்குக.

www.Padasalai.Net

➔ யா மரம் என்பது பாலை நிலத்தில் உள்ள ஒருவகை மரம் அதன் பட்டை ஈரத் தன்மையுடையது பாலை நிலத்தின் வழியாகக் கடந்து செல்லும் யானைகள்.

➔ அப்போது ஆண் யானை பெண் யானையின் பசியையும் களைப்பையும் போக்கும் பொருட்டு அம்மரப்பட்டைகளை தன் தும்பிக்கையில் உரித்து பெண் யானைக்கு கொடுக்கும் காட்சியை குறுந்தொகை,

➔ "பிடி பசி களைஇய பெருங்கை வேழம் மென்சினை யாஅம் பொளிக்கும்" என்று விளக்குகிறது.

---

6)உருவக அணியை எடுத்துக்காட்டுடன் எழுதுக.

ஒரு பொருளின் தன்மையைச் சிறப்பிக்க அதற்கு உவமையாகும் வேறொரு பொருள் மேல் உவமையின் தன்மையை ஏற்றிக் கூறுவது உருவகம் ஆகும். உவமை உவமேயம் என்னும் இரண்டும் ஒன்றே என தோன்றக் கூறுவது உருவக அணி ஆகும்.

www.Padasalai.Net

சான்று:

"இன்சொல் விளைநிலமா ஈதலே வித்தாக
வன்சொற் களைகட்டு வாய்மை எருவட்டி
அன்புநீர் பாய்ச்சி அறக்கதிர் ஈன்றதோர்
பைங்கூழ் சிறுகாலைச் செய்"

➔ இப்பாடலில்
➔ இன்சொல் – நிலம்
➔ வன்சொல் – களை
➔ வாய்மை – எரு
➔ அன்பு – நீர்

➔ அறம் – கதிர்
என உருவகிக்கப்பட்டுள்ளது.

நெடுவினா

1)தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைக் கருத்துகளைத் தனிநாயக அடிகள் வழி நிறுவுக.

முன்னுரை:

➔ உலக நாடுகளையும் மக்களையும் உட்படுத்தி அன்பு பாராட்டுவது நம் சான்றாண்மைத்தன்மை.
➔ இச்சான்றாண்மைப் பண்பு பண்டைத் தமிழ்ப் புலவர்களால் பாராட்டி பாடப்பட்டுள்ளது.
➔ நம் தமிழ் இலக்கியங்கள் காட்டும் சான்றாண்மைப் பண்புகளை அறியலாம்.

www.Padasalai.Net

யாதும் ஊரே யாவரும் நம்மவரே:

கணியன் பூங்குன்றனார் 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்னும் சான்றாண்மைக் கொள்கையை இக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் கூறியுள்ளார்.

- 'யாதானும் நாடாமால் ஊராமல் என்னொருவர்' என்று திருக்குறளும் நம் காலத்திற்கும் பொருந்தி வரும் அறிவுரையைக் கூறியுள்ளது.
- ஊர், நாடு, கேளிர் என்னும் இச்சொற்கள் பரந்த மனப்பான்மை மனித நலக் கோட்பாடு என்னும் சான்றாண்மையை வலியுறுத்துகிறது.

இலட்சியங்களைக் கடைப்பிடித்தல்:

இலட்சியங்களைக் கடைப்பிடிக்கும் சமுதாயம் உயரும்.

➔ குறிக்கோள் இல்லாத சமுதாயம் வீழ்ச்சி அடையும்.

➔ குறிக்கோள் இல்லாத மனிதன் வெறும் சதைப்பிண்டம் என்பதை, "பூட்கையில் லோன் யாக்கை" போல என்று புலவர் ஒருவர் புறநானூற்றில் கூறுகிறார்.

➔ குறிக்கோள் வேண்டும் என்பதை வள்ளுவம் "உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்" என்று குறிப்பிடுகிறார்.

www.Padasalai.Net

பிறர் நலவியலும் ஒற்றுமை உணர்ச்சியும்:

பிறர் நலத்துக்காகப் பணி செய்வதில் தான் ஒருவனுடைய வாழ்க்கை பண்புடைய வாழ்க்கை ஆகிறது.

- ➔ "என் கடன் பணி செய்து கிடப்பதே" என்னும் கொள்கையைப் பின்பற்றினர் தமிழர்.
- ➔ இச்செய்தி தமிழ்ச் சான்றோர் தன்னலம் தேடுவதில் இருந்து விடுவித்துப் பிறர் நலம் பேணுவதில் தான் சிறந்தனர் என்பதை உணர்த்துகின்றது.
- ➔ மக்கள் அனைவரும் தன் இனத்தவர் எல்லா உயிர்க்கும் அன்பு காட்டுதல் வேண்டும் என்ற உயரிய சான்றாண்மைப் பண்பை பெற்றிருந்ததையும் இலக்கியங்கள் வெளிப்படுத்துகின்றன.

<u>ஒற்றுமை உணர்வு:</u>

பாணர்களும் பாடினிகளும் தமிழ்ப் புலவர்களையும் அரசர்களையும் மக்களையும் நாட்டையும் வேறுபாடு இன்றி பாடியதால் தமிழகம் என்ற ஒற்றுமை உணர்வை உருவாக்கினர்.

www.Padasalai.Net

பிறர் நலக்கொள்கையையும் பிறர் மீதான அன்பு பாராட்டலை ஒருவருக்கு ஒருவர் உதவுதல் ஆகிய அவர் தம் அன்பையும் ஒற்றுமை உணர்வையும் பறைசாற்றுகின்றன.

"இம்மைச் செய்தது மறுமைக்கு ஆமெனும் அறவினை வணிகன் ஆய்அலன்", என்று புறநானூறு பாராட்டுகிறது.

பிறர்க்காக நன்மை செய்து வாழ்வதே உயர்ந்த பண்பும் பண்பாடும் ஆகும் "உண்டாலம்ம இவ்வுலகம்" என்ற புறப்பாட்டு இப்பண்பையே எடுத்துக்காட்டுகிறது.

முடிவுரை:

இவ்வாறு நம் இலக்கியங்கள் நம் தமிழ்ச் சான்றோர்களின் பண்புகளையும் மக்கட் தன்மையை வளர்க்க முனைந்ததையும் உலகமெல்லாம் தழுவுவதற்கும் உரிய பண்புகளை வளர்த்தனர் என்று தனி நாயக அடிகள் தம் கட்டுரை வாயிலாக நிறுவுகிறார்.

www.Padasalai.Net

2)தாய்மைக்கு வறட்சி இல்லை" என்னும் சிறுதையில் வரும் ஏழைத்தாயின் பாத்திரப் படைப்பை விளக்குக

முன்னுரை:-

தாய்மைக்கு வறட்சி இல்லை என்னும் சிறுகதையை எழுதியவர் சு.சமுத்திரம். தாய்மை உள்ளத்தை விளக்குவதாய் இக்கதை அமைகிறது.

ஏழைக் குடும்பம்:-

கர்நாரித்தில் குல்பர்கா நகரைத் தாண்டிய நெடுஞ்சாலை அருகே ஒரு தோட்டம். அங்கு உள்ள குடிசையில் வாழ்ந்து வரும் குடும்பம் ஒன்று. கணவன், மனைவி, இரண்டு குழந்தைகள், இரண்டு நாய்க்குட்டிகள் ஆகியவை குடும்ப உறுப்பினர்கள்

<u>அன்பும் கண்டிப்பும் உடைய மனைவி:-</u>

★ ஜீப்பில் இருந்து இறங்கிய அதிகாரியும் மற்றவர்களும் இலையில் பிரியாணியும் முட்டையும் சாப்பிட்டனர்.

★ கஷ்டப்பட்டு கொண்டு வந்த தண்ணீரை அவர்களுக்கு அந்த ஏழை கொடுக்கின்றான்.

★ அந்த அதிகாரி மீதி பிரியாணி, முட்டை, மற்ற உணவுகளை இலையில் வைத்துக் கொடுத்தான். அதை வாங்கி தன் குடும்பத்தை நோக்கி நகர்ந்தான்.

★ ஆனால் அவன் மனைவி மீதியை வாங்கி வருவதை பார்த்து முறைத்தாள்.

www.Padasalai.Net

<u>தாய்மை உணர்வு:-</u>

★ கணவனைக் கோபமாக பேசி விட்டு பார்த்தாள். உணவு தீர்ந்துவிடக் கூடாது என மெதுவாக சுவைத்தார்கள்.

★ இரவு உணவுக்கு என்ன செய்வோம் என்று நினைக்கையில் ஒரு உருண்டை உணவைக் கூட அவள் தொண்டை வாங்க மறுத்தது.

★ கத்திய நாய்க் குட்டிகளுக்கு உணவிட்டுத் தடவிக் கொடுத்தாள்.

★ மடியில் வைத்து சிறு உருண்டையை ஊட்டினாள்.

★ உணவு குறைய குறைய தாய்மை உணர்வும் கூடிக் கொண்டிருந்தது.

<u>முடிவுரை:-</u>

கருவைச் சுமந்திருந்தாலும் கருணையைச் சுமந்திருந்தால், தனது வயிரைக் காயப்போட்டு மற்றவர்களுக்கு உணவிட்டாள் தாய், கருணை உள்ளம் கடவுள் இல்லம்.

www.Padasalai.Net

**********The end **********

www.Padasalai.Net

www.Padasalai.Net

www.Padasalai.Net

www.Padasalai.Net